
பக்கங்கள் 23

காலை முரசு

முழக்கம்: 02 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 27 வெள்ளிக்கிழமை 11.07.2025 அதிர்வு 341

## சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியீடு



2024 ஆம்ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள் என என்று 03





## செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து

# புத்தகப் பை, பொம்மையோடு மீட்கப்பட்ட எலும்புக்கூட்டின் ஆய்வு அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கட்டளை

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து நீல நிறப் பாடசாலைப் புத்தகப் பை (யுனிசெவ் நிறுவனத்தின் புத்தகப் பை), சிறுவர்கள் விளையாடும் பொம்மை என்பவற்றோடு அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித என்புத் தொகுதி தொடர்பான மனித என்பு ஆய்வு அறிக்கையை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் செல்லையாவுக்கு யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவால் கட்டளை ஒன்று வழங்கப்பட்டுள்ளது. 03

# இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் முதல் 15 நாள்களுக்கான அறிக்கையை 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குக!



## பேராசிரியர் ராஜ் சோமதேவாவுக்கு யாழ். நீதிவான் ஆனந்தராஜா உத்தரவு

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ். செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் முதல் 15 நாள்களுக்கான செயற்பாட்டு அறிக்கையை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு பேராசிரியர் ராஜ் சோமதேவாவுக்கு நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜாவால் நெரூர் கட்டளை ஒன்று வழங்கப்பட்டுள்ளது.


செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான அகழ்வுப் பணிகள் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில் துறைசார் நிபுணரும் பேராசிரியருமான ராஜ் சோம 03

03




‘ செல்லும் செல்லாததெல்லாம் செட்டியார் தலை மேலே!’ என்பார்கள். அதுபோல ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் விடயங்கள் தொடர்பில் எல்லாக் குற்றச்சாட்டுகளையும் ‘பிள்ளையான் அண்ட் கோ’ மீது சுமத்துவதற்கு அரசு திட்டமிடுகின்றதோ என்ற சந்தேகம் பலருக்கும் ஏற்பட்டிருக்கிறது.

பிள்ளையானைச் சுற்றி இருந்த எல்லோரும் கைது செய்யப்படுகிறார்கள். ஆனால் அந்தக் கைதுகளுக்கும் ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கும் தொடர்பு இருப்பதாக செய்திகள் வெளியாகவில்லை. அதற்கு முன்னர் இடம்பெற்ற பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகவே பிள்ளையானைச் சூழ உள்ள 03




# செம்மணி விடயத்தில் இந்த அரசு உண்மையாக நடக்கவே மாட்டாது!

## அடித்துக் கூறுகிறார் கஜேந்திரகுமார்

“செம்மணிப் புதைகுழிகளுக்கு பொறுப்புக்கூற வேண்டிய சந்திரிகா காலத்தில் அந்த அரசோடு இணைந்திருந்து தமிழருக்கெதிரான யுத்தத்தை தொடரவேண்டும் என வலியுறுத்திய ஜே.வி.பியினரும் இதற்கு பொறுப்புகூற வேண்டியவர்களே. ஒரு குற்றதுக்கு பொறுப்புகூறவேண்டிய தரப்பே இன்று அதை விசாரிக்க முற்படுவது இயற்கை நீதிக்கு முற்றிலும் மாறானது. உண்மையான நீதி கிடைக்க வேண்டும் என நீங்கள் (ஜேவிபி) உண்மையாகவே விரும்பினால், அது சுயாதீன சர்வதேச விசாரணைப் பொறிமுறை

ஒன்றின் ஊடாக மட்டுமே சாத்தியமாகும்.”

– இவ்வாறு நேற்று முந்தினம் நாடாளுமன்றத்தில் தமது காட்டமான உரையில் கூறிய அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், “செம்மணி மனிதப் புதைகுழி விடயத்தில் நீங்கள் உண்மையாக இருக்கமாட்டீர்கள் என்பதை நிச்சயமாக நான் உங்களுக்குச் சொல்ல முடியும்.” – என்று அரசுத் தரப்பினரைப் பார்த்து பட்டவர்த்தனமாகத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீது உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

“செம்மணியின் சூழ்நிலையைப் பாருங்கள். தமிழர்களின் நிலையைப் பாருங்கள். ஒரு அரசாங்கமாக நீங்கள் போரை ஆதரித்தீர்கள். நீங்கள் சந்திரிகா அரசாங்கத்துடன் அங்கமான ஒரு கட்சியாகவும் இருந்தீர்கள். மேலும் அந்த சந்திரிகா அரசாங்கம் செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட தரப்பாகும்.

மனிதப் புதைகுழிகள் முதல் முறையாக 1996 அல்லது 97 ஆம் ஆண்டுகளில் வெளிவந்தது. பின்னர் 15 உடல்களை பற்றிய விடயமே விசாரணைகளில் வெளிவந்தன. கிருசாந்தி குமாரசுவாமி வழக்கில் எனது தந்தையார் கிருசாந்தி குமாரசுவாமி குடும்பத்தின் நலன்களைக் கவனித்த வழக்கறிஞர் என்பதால் இதை நான் அறிவேன்.

கிருசாந்தி குமாரசுவாமி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் கூண்டிலிருந்து முன்வைத்த அறிவிப்பில், செம்மணி பகுதியில் 500 முதல் 600 க்கும் மேற்பட்ட உடல்கள் புதைக்கப்பட்டிருந்தன எனக் கூறியிருந்தாலும், 15 மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டன. தற்போது கண்டுபிடிக்கப்பட்ட செம்மணி மனித புதைகுழியானது அந்த இடத்திலிருந்து சில மீட்டர்கள் தொலைவில்தான் உள்ளது.

எனவே, குற்றம் சாட்டப்பட்ட ஒரு தரப்பாக இருந்த அரசு – அப்போது கவலைப்படவே இல்லை. குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் விவரங்களை வழங்கி – தற்போதைய புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களிலிருந்து சுமார் 100 யார் தொலைவில் உள்ளதாக அந்த இடங்களின் விவரங்களைக் கொடுத்த போதிலும் கவலைப்படவே இல்லை.

அரசே குற்றம் சாட்டப்பட்ட தரப்பாக இருக்கும்போது இப்படிதான் நடக்கும்.

இப்போது நான் உங்களிடம் கேட்கிறேன். இது தமிழ் சிங்கள முஸ்லிம் விடயமாக இல்லாமல், பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கு நீதி கிடைத்ததாக உணர்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு, நடந்த குற்றங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதற்கான சட்டப்பூர்வத்தன்மையை நீங்கள்



விரும்புகிறீர்களா? என்பதையே நான் கேட்க விரும்புகிறேன்.

அரசே குற்றம் சாட்டப்பட்ட ஒரு தரப்பாக இருக்கும் போது – குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை இல்லாமல் உங்களுக்கு எந்தக் கட்டுப்பாடும் கிடையாது. ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் விவகாரத்தில் நீங்கள் உண்மையானவர்களாக இருந்தாலும் கூட – செம்மணி மனிதப் புதைகுழி விடயத்தில் நீங்கள் உண்மையாக இருக்கமாட்டீர்கள் என்பதை நிச்சயமாக நான் உங்களுக்குச் சொல்ல முடியும். ஏனென்றால் நீங்கள் அனைவரும் போரை விரும்பினீர்கள். நீங்கள் அனைவரும் போரை ஆதரித்தீர்கள்.

போர்க்குற்றங்கள் தொடர்பாக ஒருபோதும் வழக்குத் தொடரப்படாது என்றும் உண்மையை கண்டறிவதற்கு ஆணைக்குழு மட்டுமே உருவாக்கப்படும் என்றும் உங்கள் ஜனாதிபதியே தெரிவித்துள்ள நிலையில் – உடைந்த இந்த அரசை நீங்கள் சரிசெய்ய விரும்பினால், பாதிக்கப்பட்டவர்கள் பக்கம் இருந்து செயற்படும் அரசாங்கம் உங்களிடம் உள்ளது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் நீங்கள் செயலாற்றவேண்டும்”

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது ரத, கஜ, துரக பதாதிகள் கைது செய்யப்படுகின்றனர் என்றவாறாகச் செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

ஆனால் ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பில் அச்சமயம் சிறையில் இருந்த பிள்ளையான், அந்த விடயங்களை அறிந்திருந்தார் என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் பொறுப்புடன் கூறியிருக்கிறார்.

அது உண்மையாக இருக்கலாம். ஆனால் பாதுகாப்புத் தரப்பினரின் - நீதித்துறையினரின் - உதவி, உடந்தை, ஒத்தாசை இல்லாமல், சிறைக்குள் இருந்தபடி இந்த குற்றத்தில் பிள்ளையான் பங்களித்திருக்க முடியும் என்று நம்புவதற்கு யாரும் தயாராக இல்லை.

இது, விடயத்தில் விவகாரம் பாதுகாப்பு தரப்பினர் பக்கம் இன்னமும் நெருங்கவில்லை. ஆங்காங்கே முஸ்லிம் தீவிரவாத அமைப்பினர் செய்த சில குற்றங்களை விடுதலைப் புலிகள் மீது திட்டமிட்டு சுமத்தி, விசாரணைப் போக்கை திசை திருப்புவதற்கு உதவினர் என்ற பெயரில் சில பாதுகாப்புத் தரப்பினர் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு இருக்கின்றார்கள் என்பதை தவிர இதற்கு அப்பால் பாதுகாப்புத் தரப்பினர் மீது இந்தக் குற்றச்சாட்டு விரல் நீளவில்லை.

எது, எப்படியாயினும் விசாரணை வளையம் பாதுகாப்பு தரப்புகளுக்கு எதிராகத் திரும்பும் போது, விடயம் புதைகுழிக்குள் போய்விடும் என்பது நிச்சயம்.

இதுவரை காலமும் தமிழருக்கு எதிரான விடயங்களில், தமிழருக்கு நீதி கேட்டு வாய் திறக்காத கர்தினால் மல்கம் ரஞ்சித், பௌத்த - சிங்களப் பேரினவாதத்துடன் அந்த விடயங்களில் கைகோர்த்து நின்றவர். ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் விசாரணைகள் படைத்தரப்பு மட்டத்திற்கு எதிராகத் திரும்பி, அதனால் அந்தக் கட்டத்துடன் அந்தப் புலனாய்வு விசாரணைகள் முடங்கும் போது அவர் என்ன செய்வார்?

இந்த விவகாரங்களை விசாரிப்பதற்கு சர்வதேச பங்களிப்பு - நேரடி ஈடுபாடு அவசியம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்கு இணங்கி, வரவேண்டிய கட்டாயம் ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதலில் பெரிதும் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்களின் இலங்கை தலைவரான கர்தினால் மல்கம் ரஞ்சித் திற்கு ஏற்படும் என்பது முக்கியம்.

இவ்வளவு காலமும் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி வழங்கக் கோரி குரல் எழுப்ப மறுத்து நின்ற கர்தினால் அப்போது தமிழர்களுக்காகவும் குரல் எழுப்ப வேண்டி இருப்பார் என்று நிச்சயமாக நம்பலாம்.

* * *

ஜே.வி.பியின் ஸ்தாபகத் தலைவர் றோஹண விஜேவீரவிண் கொலையில் முன்னாள் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அசோக தொரதெனிய சம்பந்தப்பட்டார் என்று கூறப்படும் விடயத்தை ஒட்டிய வழக்கின் உத்தரவு வழங்குவதை கொழும்பு நீதிவான் ஜூலை 15 ஆம் தேதிக்கு நேற்று முன்தினம் ஒத்திவைத்தார்.

முன்னதாக, முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் முன்னணி சோசலிசக் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான இந்திராநந்த டி சில்வா, விஜேவீரவின் கொலை தொடர்பாக தொரதெனியவுக்கு எதிராக மின்னனு மற்றும் அச்சு ஊடகங்களில் அறிக்கைகளை வெளியிடுவதையும், அவற்றை சமூக ஊடகங்களில் வெளியிடுவதையும் தடுக்கும் வகையில் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்திருந்தது.

இணைய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மறைந்த ஜெனரல் ஜனக பெரேரா தலைமையிலான இராணுவக் குழுவால் கைது செய்யப்பட்ட விஜேவீரவைக் கொலை செய்வதில் தோரதெனிய சம்பந்தப்பட்டிருந்தார் அல்லது பங்கேற்றார் என்று இந்திராநந்த டி சில்வா பல யூடியூப் அறிக்கைகளை வெளியிட்டிருந்தார்.

தொரதெனியவுக்கு எதிராக பொது மக்களைத் தவறாக வழிநடத்தும் பொய்யான மற்றும் வெறுக்கத்தக்க அறிக்கைகளை வெளியிடுவதைத் தடைசெய்யும் தடை உத்தரவை கொழும்பு மேலதிக நீதவான் மஞ்சுள ரத்நாயக்க பிறப்பித்தார்.

அந்த விடயம் தொடர்பான வழக்கை விசாரித்த நீதிவான் தீர்ப்பை 15 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

## புத்தகப் பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான அகழ்வுப் பணிகள் யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில் துறைசார் நிபுணரும் பேராசிரியருமான ராஜ் சோமதேவாவின் தலைமையில் இடம்பெற்றிருந்தன. சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகியிருந்தனர். நேற்றைய தினம் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. எதிர்வரும் 21ஆம் திகதி அகழ்வுப் பணிகள் மீள ஆரம்பமாகவுள்ளன.

இந்நிலையில் செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் போது எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட நீல நிறப் பாடசாலைப் புத்தகப் பையோடு (யுனிசெவ் நிறுவனத்தின் புத்தகப் பையோடு) சிறுவரினுடையது எனச் சந்தேகிக்கப்படும் என்புத் தொகுதி ஒன்று அடையாளம் காணப்பட்டிருந்தது. அந்த என்புத் தொகுதிக்கு அருகில் சிறுவர்கள் விளையாடும் பொம்மை, ஆடை, சிறுமிகள் பயன்படுத்தும் பாட்டா நிறுவனத் தயாரிப்பு காலணி, சிறு கண்ணாடி வளையல்கள் என்பனவும் அடையாளம் காணப்பட்டு அகழ்ந்து எடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட அந்த மனித என்புத் தொகுதி தொடர்பான மனித என்பு ஆய்வு அறிக்கையை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் செல்லையாவுக்கு நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜாவால் கட்டளை ஒன்று நேற்று வழங்கப்பட்டுள்ளது.

## இரண்டாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவாவின் தலைமையில் இடம்பெற்றிருந்தன. சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகியிருந்தனர்.

செம்மணி மனிதப் புதைகுழியின் முதலாம் கட்ட அகழ்வுப் பணிகள் ஜூன் மாதம் 7ஆம் திகதியுடன் நிறைவுக்கு வந்திருந்தன. இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் ஜூன் மாதம் 26ஆம் திகதி ஆரம்பமாகியிருந்தன. இந்த அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக நேற்றுடன் இடைநிறுத்தப்பட்டன. எதிர்வரும் 21ஆம் திகதி மீள அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகவுள்ளன.

இந்நிலையில் இரண்டாம் கட்ட அகழ்வுப்பணிகளின் முதல் 15 நாட்களுக்கான செயற்பாட்டு அறிக்கையை இந்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவுக்கு யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவால் கட்டளை ஒன்று நேற்று வழங்கப்பட்டுள்ளது.

## சாதாரண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சையில் தோற்றிய பரீட்சார்த்திகள் http://www.doenets.lk மற்றும் http://www.results.exams.gov.lk தளத்தில் சுட்டெண் உள்ளிட்ட விவரங்களை உள்ளீடு செய்வதன் மூலம் பெறுபேறுகளை அறிந்துகொள்ள முடியும்.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு மொத்தம் 4 இலட்சத்து 78 ஆயிரத்து 182 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். அவர்களில் 3 இலட்சத்து 98 ஆயிரத்து 182 பேர் பாடசாலை பரீட்சார்த்திகளாவர்.

# இலங்கையின் தேசியப் பாதுகாப்பு புலிகளின் காலத்தைவிட மிக மோசம்

## மொட்டுக் கட்சி கூறுகின்றது

இலங்கையின் தேசியப் பாதுகாப்பு விடுதலைப்புலிகளின் காலத்தை விடவும் மிகவும் மோசமான நிலைக்குச் சென்றுள்ளது என்று ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார். .

தேசியப் பாதுகாப்பு தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டின் தேசியப் பாதுகாப்பு தற்போது வரலாறு காணாத அச்சுறுத்தலுக்குள் தள்ளப்பட்டுள்ளது. நீதிமன்றத்துக்குள் வைத்து துப்பாக்கிச்சூடுகள் இடம்பெறுகின்றன. பொலிஸார் முன்னிலையில் துப்பாக்கிச்சூடு நடத்தப்படுகின்றது. வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து படுகொலைகள் இடம்பெறுகின்றன. ஆனால், ‘ஆயுதக் குழுக்களின் உறுப்பினர்களே உயிரிழக்கின்றனர்’ எனக் கூறி இந்தப் படுகொலைகளை நியாயப்படுத்துவதற்கு அரசு முற்படுகின்றது.

சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்கே மக்கள் அரசைத் தெரிவு செய்கின்றனர். எனவே, கொலை செய்யப்படுபவர்கள் யாரென்பது முக்கியம் அல்ல. எதற்காக இவ்வாறு படுகொலைகள் இடம்பெறுகின்றன என்பதே பிரதானமான விடயம்.

எதிர்க் கருத்துக்கள் உடையவர்களைக் கட்டுப்படுத்த முடியாதபோது,



அவர்களைப் படுகொலை செய்துவிடும் ஆட்சியைப் பாசிசவாத ஆட்சியென்றே அழைப்பார்கள். ஆதலால், இலங்கையில் தற்போது இடம்பெற்றுவரும் ஆட்சி தொடர்பில் எமக்குப் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில், விடுதலைப்புலிகளின் காலத்தில்கூட இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறவில்லை.” – என்றார்.

# அமெரிக்காவின் வரி விதிப்பை அரசு எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றது?

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்விக்கணை



“அமெரிக்காவின் பரஸ்பர தீர்வை வரிக்கு அரசு எவ்வாறு முகம் கொடுக்கப் போகின்றது? கடைப்பிடிக்கப்போகும் கொள்கை யாது? அரசின் பதில் என்ன?”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்விக்கணைகளைத் தொடுத்துள்ளார்.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தீர்வை வரி விதிப்பு குறித்து விசேட கருத்தை வெளியிட்டபோதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் சகல பொருட்களுக்கும் 30 வீத பரஸ்பர தீர்வை வரியை விதித்துள்ளார்.

இது இலங்கை நாட்டின் ஏற்றுமதிகளின் மீது கடுமையான எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஆடை, தேயிலை, இறப்பர், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மீன்பிடித் துறைகளுக்குக் கடுமையான எதிர்மறையான தாக்கத்தை இது கொண்டு வரும்.

நமது நாட்டின் ஏற்றுமதியில் 26.4 சதவீத பங்களிப்பைப் பெற்றுத் தரும் ஏற்றுமதி தலமாக அமெரிக்கா திகழ்ந்து வருகின்றது. 2024 ஆம் ஆண்டில் நமது நாட்டின் ஏற்றுமதி மதிப்பு 3.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். 30 வீத தீர்வை வரி விதிக்கப்படுவதால் ஏற்றுமதி வர்த்தகம் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்ளும்.

இந்தக் கட்டமைப்பு சார் வர்த்தக நிலுவை தொடர்ந்து நீடித்து வரும். ஏற்றுமதி இடங்களைப்பல்வகைப்படுத்துவதன் மூலமே இதைத் தவிர்க்கலாம்.

விதிக்கப்பட்ட 44 வீத வரி 30 வீதமாகக் குறைக்கப்பட்டமையானது நமது நாட்டில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது என்று பலர் கருதினாலும், இவ்வளவு உயர் மட்ட தீர்வை வரியை விதிப்பதானது நமது நாட்டுக்குப் பெரும் தீங்கை விளைவிக்கும். இதனால் வியட்நாம் மற்றும் வங்களாதேசம் போன்ற நாடுகளுக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்கும்.

ஆடைத் துறையில் நாம் கொண்டிருக்கும் உயர் தயாரிப்பு நாமத்தை இழக்கும் நிலை ஏற்படலாம். பெறுமதி சேர் தேயிலை மற்றும் இறப்பர் சார்ந்த பொருட்களுக்கும் இதனால் பெரும் தாக்கம் ஏற்படும்.

தற்போதைய அரசு இந்தப் பிரச்சினையைக் கண்டு, நமது நாட்டுக்குச் சிறந்த தீர்வைக் காண தன்னால் முடிந்த அனைத்தையும் செய்திருக்கின்றதா என்ற கேள்வி எம் மத்தியில் காணப்படுகின்றது. இந்தப் பிரச்சினை எழுவதற்கு முன்பே, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வெற்றியைத் தொடர்ந்து என்ன நடக்கப் போகின்றது என்பது குறித்து நாடாளுமன்றத்திலும் வெளியிலும் அரசுக்கு நாம் எச்சரிக்கை விடுத்தோம்.

நாட்டுக்காக, மக்களுக்காக, ஏற்றுமதித் துறைக்காக இராஜதந்திர ரீதியான கடமை இதில் நிறைவேற்றப்பட்டதா என்பதில் பிரச்சினை காணப்படுகின்றது. இரு நாடுகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தி பின்பற்ற வேண்டிய ஒழுங்குகள் சரியாக பின்பற்றப்பட்டதா என்பதிலும் பிரச்சினை இருக்கின்றது.

செனட் மற்றும் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களுடன், குறிப்பாக இலங்கையுடன்உறவுகளைக்கொண்டவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்த வேண்டும். அவர்கள் மூலம் அமெரிக்க அரசின் மீது அதிகபட்ச அழுத்தத்தை ஏற்படுத்த வேண்டும். வரிச் சட்டத்துக்கு இரு அவைகளிலும் குறைந்த பெரும்பான்மையினரால் அங்கீகரிக்கப்பட்டதால், நமது நாடு இந்த சூழ்நிலைகளைச் சரியாக பயன்படுத்திக் கொண்டு பொருத்தமான செல்வாக்கைப் பிரயோகிக்க வேண்டும். இந்த வாய்ப்பை அரசு முறையாகப் பயன்படுத்தியுள்ளதா என்ற கேள்வி உள்ளது.

உலக வர்த்தக அமைப்பின் மூலம் செலுத்தக் கூடிய அழுத்தம் முறையாகப் பயன்படுத்தப்பட்டதா என்ற கேள்வியும் காணப்படுகின்றது. இந்தத் தீர்வை வரிகள் விதிக்கப்படுவது நமது நாட்டின் பல்வேறு துறைகளின் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும். இந்தப் பிரச்சினைக்கு அரசு வழங்கும் பதில்களும் தீர்வுகளும் என்ன ? நாம் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

தொழில் இழப்புகள் மற்றும் தொழிற்சாலைகளை மூடுதல் என்பன சமூகப் பேரழிவை உருவாக்கக்கூடும். இது வறுமை அதிகரிப்பதற்கு காரணமாகவும் அமையும். இதுபோன்ற சூழ்நிலையில், இந்தப் பிரச்சினைக்கான தெளிவான தீர்வை அரசிடமிருந்து அறிந்து கொள்வது எமக்கு அவசியம்.

எதிர்க்கட்சி என்ற வகையில், ஐக்கிய மக்கள் சக்தி நாட்டுக்கும், மக்களுக்கும், ஏற்றுமதித் துறைக்கும் தன்னால் முடிந்த அதிகபட்ச ஒத்துழைப்பை இதற்குப் பொற்றுத் தரும்.” – என்றார்.





# மயிலிட்டி கண்ணகி அம்பாள் புதிய சித்திரத் தேர் திருவிழா

மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை அருள்மிகு கண்ணகி அம்பாள் 35 ஆண்டுகளின் பின்னர் பக்தர்களின் அரோகரா கோசத்துடன் புதிய சித்திரத் தேரிலேறி வலம்வந்தார்.

மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை அருள்மிகு கண்ணகி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த மாதம் 26 ஆம் திகதி ஆரம்பமாகி இடம்பெற்றுவரும் நிலையில் 14 ஆவது நாள் திருவிழாவாக தேர்த்திருவிழா நேற்று முன்தினம் வெகு சிறப்பான முறையில் இடம்பெற்டறுள்ளது.

தேர் உற்சவத்தை முன்னிட்டு பகல் 10 மணிக்கு அபிசேகத்தை தொடர்ந்து விசேட தவில் நாதஸ்வர கச்சேரி இடம்பெற்று நண்பகல் 2.30 மணிக்கு வசந்தமண்டப பூசையை தொடர்ந்து கண்ணகி அம்பாள் தேரேறி வலம் வந்தார்.

புதிய சித்தரத்தேரில் கண்ணகி அம்பாள் ஆராகணம் செய்து இருப்பிடத்தை அடைந்த பின்னர் தேரடி நிகழ்வாக தொடர்ந்து உலகப்புகழ் பெற்ற கோண்டாவில் நாதஸ்வர வித்துவான், நாதஸ்வர இளவரசன், நாதஸ்வர கலாநிதி பஞ்சமூர்த்தி குமரன் குழுவினர், மல்லாகம் நாதஸ்வர வித்துவான் நாதகாணவாருதி ட.பானுசங்கர் (பானு) குழுவினர், பஞ்சாபிகேசனின் பேரப்பிள்ளைகளான வி.சித்தார்த்தன், வி.பிரதித்தன் குழுவினர் இணைந்து விசேட தவில் நாதஸ்வர கச்சேரி நடத்தி இசை மழை பொழிந்தனர்.

35 ஆண்டுகளின் பின்னர் புதிய சித்திரத்தேரில் கண்ணகி அம்பாள் ஆராகணம் செய்வதை பார்ப்பதற்காக உள்ளூரில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் பெருமளவான பக்தர்கள் வருகைதந்திருந்தனர்.















நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இது, மேலதிக வரி விதிப்பு!

அரசாங்கத்தின் தவறுகளை - பின்னடைவுகளை - பிழைகளை - சுட்டிக்காட்டுவதுதான் எதிர்க்கட்சிகளின் பிரதான வேலை. இந்த விடயத்தில் வாய்ப்புக் கிடைத்தால் ‘தூக்கிக் குத்தவும்’ அவை தவறுவதில்லை.

அந்த வகையில் இப்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு அமெரிக்க வரி விதிப்பு விடயம் வசதியாகக் கிட்டியிருக்கிறது. அதனால் அரசாங்கத்தை எதிர்க்கும் தனது கடப்பாட்டில் கைவரிசை காட்டியிருக்கின்றார் அவர்.

அமெரிக்காவிற்கான ஏற்றுமதிகளுக்கு குறைந்த வரிகளை விதிக்கச்செய்ய இலங்கையால்இயலாமல் போனமைக்கு பலவீனமான மற்றும் சுயநல பேச்சுவார்த்தைகளே காரணம் என்று சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

“இலங்கை ஏற்றுமதிகள் மீது அமெரிக்கா முப்பது வீதன் வரி விதிப்பது என்பது எமது மோசமான பேச்சுவார்த்தைக்கு நாம் கொடுக்கும் விலை. எங்கள் ஈகோ ஒவ்வொரு பங்காளியையும், ஒவ்வொரு நிபுணர் கையையும் தேடுவதைத் தடுத்தது. இப்போது கிட்டத்தட்ட 3 பில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதிகள் அந்தரத்தில் இடையில் சிக்கி உள்ளன.

‘‘சிக்கலான யதார்த்த உலக பேச்சுவார்த்தைகளுக்கு ‘பாடப்புத்தக நிபுணர்களை’ நம்பியிருப்பதன் ஆபத்துகள் குறித்த ஒரு சம்பவம் இது’’- என அவர் இந்நிலைமையை விவரித்திருக்கின்றார்.

இது வெறுமனே முப்பது வீத வரி விதிப்பல்ல. அதையும் தாண்டி நெருக்கடியான விடயம் என்பது அவதானிக்கப்பட வேண்டும்.

அமெரிக்கஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் நேற்று முன் தினம் முன்மொழிந்த 30 வீத வரி, இலங்கையிலிருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு விதிக்கப்படும் தற்போதைய வரிகளுக்கு மேலதிக மானது என்று ஜனாதிபதியின் மூத்த பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவா உறுதிப் படுத்தியிருக்கின்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற சிறப்பு ஊடகவியலாளர் சந்திப்பின் போது பேசிய ஜனாதிபதியின் மூத்த பொருளாதார ஆலோசகர் ஹுலங்கமுவா, ஓகஸ்ட் 1 முதல் அமெரிக்காவிற்கு அனுப்பப்படும் அனைத்து பொருள்களுக்கும் கூடுதலாக 30 வீத வரி இருக்கும் என்று தெளிவுபடுத்தினார்.

ஆகவே இப்போது விதிக்கப்படுவது 30 வீத வரி அல்ல. இருக்கும் வரிகளுக்கு மேலதிகமான முப்பது வீத வரி அதிகரிப்பாகும்.

மெல்ல மெல்ல மீண்டெழுந்து வரும் இலங்கையின் பொருளாதாரத்தை இந்த வரி விதிப்பு மீண்டும் பெரும் இக்கட்டுக்குள் தள்ளும். இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் இந்த வரி விதிப்பு கணிசமான பின்னடைவுத் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இந்தநெருக்கடியைஎதிர்கொண்டு மீண்டெழுவதற்கு அரசு என்ன திட்டம் வைத்திருக்கின்றது? யாருக்கும் தெரியவுமில்லை. யாருக்கும் தெளிவுமில்லை.

இது விடயத்தில் அமெரிக்காவில் உள்ள அதிகாரிகளுடன் இலங்கை தொடர்ந்து கலந்துரையாடல்களை நடத்தும் என்பது மட்டும்தான் இலங்கையின் அதிகாரத் தரப்பில் இருந்து வரும் சற்று ஆறுதல் படுத்தும் - பதிலாக - செய்தியாக - இருக்கின்றது.

# வல்வை முத்துமாரி அம்மன் பூங்காவனம் அடிக்கல் நாட்டுதல்



வல்வை முத்துமாரி அம்மன் பூங்காவனம் அடிக்கல் நாட்டுதல் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

# அரசாங்கத்துக்கு எதிராக பேசுபவர்கள் சி.ஐ.டிக்கு அழைக்கப்படுகிறார்கள்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



அரசாங்கத்துக்கு எதிராக பேசுபவர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்படுகிறார்கள் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சிவப்பு முத்திரை பதிக்கப்பட்ட பெரும்பாலான கொள்கலன்கள் எவ்வித பரிசோதனைகளுமின்றி விடுவிக்கப்பட்டமை பாரதூரமானது என்று நாங்கள் குறிப்பிட்ட விடயத்தையே ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவும் குறிப்பிட்டுள்ளது. குழுவின் பரிந்துரையின் பிரகாரம் ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கை என்னவென்பதை வெளிப்படுத்த வேண்டும்.

பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் பற்றி பல விடயங்களை குறிப்பிட்டு மக்களுக்கு இதனை அறிவுறுத்தியவர்கள் தற்போது இலக்கு வைக்கப்பட்டுள்ளார்கள். பேச்சு சுதந்திரம் திட்டமிட்ட வகையில் மறுக்கப்படுகிறது. அரசாங்கத்துக்கு எதிராக பேசுபவர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்படுகிறார்கள்.

முறையற்ற வகையில் விடுவிக்கப்பட்ட கொள்கலன்கள் தொடர்பில் ஊடகச் சந்திப்பில் குறிப்பிட்ட விடயத்துக்காக நேற்று முன்தினம் கொழும்பு குற்றத் தடுப்பு திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்தேன், அங்குச் சென்று வாக்குமூலமளித்துள்ளேன்.

சிவப்பு முத்திரை பதிக்கப்பட்ட பெரும்பாலான கொள்கலன்கள் எவ்வித பரிசோதனைகளுமின்றி விடுவிக்கப்பட்டமை பாரதூரமானது என்று நாங்கள் குறிப்பிட்ட விடயத்தையே ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவும் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் கடந்த ஜனவரி மாதம் சுங்கத்தில் இயல்பாகவே கொள்கலன்கள் விடுவிப்பில் நெரிசல் ஏற்பட்டதா அல்லது திட்டமிட்ட வகையில் நெரிசல் ஏற்படுத்தப்பட்டதா என்பதில் சந்தேகம் உண்டு என்றும் குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.இதனையே நாங்களும் குறிப்பிட்டோம்.

குழுவின் பரிந்துரையின் பிரகாரம் ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கைகள் என்னவென்பதை வெளிப்படுத்த வேண்டும்.அரசாங்கத்தின் முறைகேடான செயற்பாடுகள் இறுதியில் அரச அதிகாரிகள் மீது சுமத்தப்படுகிறது. கொள்கலன்கள் விடுவிப்பு விவகாரத்திலும் இதுவே நேர்ந்துள்ளது.” என்றார்.



# ஒட்டிசமுள்ள பிள்ளைகளுக்கான நிலையங்களை அமைப்பதற்கான தேசிய அளவிலான பொறிமுறை

ஒட்டிசம் மற்றும் நரம்பியல் வளர்ச்சி பிரச்சினைகள் உள்ள குழந்தைகளுக்காக பராமரிப்பு நிலையங்களை நிறுவுவதற்கு தேசிய அளவிலான பொறிமுறையை தயாரிப்பதற்கான கூட்டுத் திட்டத்திற்கான எண்ணக்கரு ரீதியான முன்மொழிவை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் எண்ணக்கருவின் அடிப்படையில் செயல்படுத்தப்படும் இந்த திட்டம் குறித்து சமூக சக்தி செயலகத்தின் தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதியின் செயலாளர் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்த திட்டம் சம்பந்தப்பட்ட துறைசார் அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களால் செயல்படுத்தப்படுவதோடு ஒருங்கிணைப்பு பணிகளை ஜனாதிபதி அலுவலகம் மேற்கொள்ளும்.

இந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் மகளிர் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 250 மில்லியன் ரூபா நிதியை மீள திரைசேறிக்குப் பெற்று சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாக மாவட்ட செயலாளர்களுக்கு வழங்குதல், பராமரிப்பு நிலையங்களை செயல்படுத்த தேவையான மனிதவள அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பது, இந்தத் திட்டத்தை தொடர்புடைய அமைச்சுக்கள் மற்றும் துறைசார் நிறுவனங்களை இணைத்து அறிவியல் பின்னணியுடன் கூடிய புதிய மாதிரியொன்றைத் தயாரிப்பது குறித்து ஆராயப்பட்டது.

இந்த விடயங்களை உள்ளடக்கிய ஒரு பொறிமுறையைத்தயாரிப்பதற்கான எண்ணக்கரு ரீதியான முன்மொழிவை இரண்டு வாரங்களுக்குள் தயாரிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க அதிகாரிகளுக்கு மேலும் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில், ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் கபில ஜனக பண்டார, பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சின் செயலாளர் கே.டீ.ஆர். ஓல்கா, கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் சம்பத் மந்திரிநாயக்க,மேலதிகச் செயலாளர் எச்.ஏ. ஹேமா பெரேரா, சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் தர்ஷனி கருணாரத்ன, சுகாதார அமைச்சின் சமூக சுகாதாரப் பிரிவின் பணிப்பாளர் வைத்திய நிபுணர் வருணி ரசாதரி, சமூக சுகாதார பிரதிப் பணிப்பாளர் வைத்திய நிபுணர் ஆசிரி ஹேவமாலகே மற்றும் லேடி ரிட்ஜ்வே மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சந்துஷித சேனாதிபதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.









# அம்பாறையில் சிறுபோக நெல் அறுவடை ஆரம்பம்

**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்டத்தில் இம்முறை மேற்கொள்ளப்பட்டு வந்த சிறுபோகத்திற்கான நெல் அறுவடை மிக துரிதமாக நடைபெற்று வருவதாக அம்பாறை மாவட்ட விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் சுமார் 55,285 ஹெக்டேரில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையின் மூலம் சுமார் 02 இலட்சத்து 65 ஆயிரத்து 736 மெற்றிக்தொன் நெல் அறுவடையாக எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய நெல் உற்பத்தியில் இம்மாவட்டம் 12.7 வீத பங்களிப்பை செய்து வருவதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் நெல் உற்பத்தி செய்யும் முதல் மூன்று மாவட்டங்களிலும் அம்பாறை மாவட்டமும் முதன்மை வகிக்கின்ற நிலையில், இம்முறை மேற்கொள்ளப்பட்ட நெல் உற்பத்தியில் கணிசமானவை “சிவப்பு நாடு” இனத்தைச் சேர்ந்தவை ஆகும்.

நாவிதன்வெளி, அக்கரைப்பற்று, ஒலுவில், நிந்தவூர், அட்டாளைச்சேனை, சம்மாந்துறை போன்ற பிரதேசங்களில் தற்போது அறுவடை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது அறுவடை செய்யப்பட்டு வரும் உலர வைக்காத நெல் ஒரு கிலோ 100 ரூபா முதல் 105 ரூபா வரை தனியார் நெல் வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்படுகிறது.









# திருக்கோவிலில் குருபூர்ணிமா தினம்

(வி.ரி.சகாதேவராஜா)

இராமகிருஷ்ண மிஷனின் மட்டக்களப்பு கல்லடி இ.கி.மிஷன் குருகுலம் ஏற்பாடு செய்த குரு பூர்ணிமா தின நிகழ்வுகள் இராமகிருஷ்ண திருக்கோவிலில் நேற்று வியாழக்கிழமை காலை முதல் சிறப்பாக நடைபெற்றன.

இந் நிகழ்வு இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்சராத்மானந்தா ஜீ மகராஜ் வழிகாட்டலில், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜி மகராஜ் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் சுவாமி உமாதீசானந்தா ஜீ ஆகியோருடன் மிஷன் பழைய மாணவர்கள், அபிமானிகள் கலந்து சிறப்பித்தார்கள்.

பல்கலைக்கழக கல்வியை பூர்த்தி செய்த மிஷன் மாணவ, மாணவிகள் கௌரவிக்கப்பட்டனர்.

















# இலங்கையின் மாற்றத்துக்கு கேட்ஸ் நிறுவனம் பாராட்டு

நாட்டின் பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் அரசாங்கமும் ஜனாதிபதியும் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளதாக கேட்ஸ் நிறுவனத்தின் உலகளாவிய அபிவிருத்திப் பிரிவின் தலைவர் கிறிஸ் எலியாஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெற்று வரும் புதிய மாற்றத்தையும் அவர் பாராட்டியுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், கேட்ஸ் நிறுவனத்தின் உலகளாவிய அபிவிருத்திப் பிரிவின் தலைவர் கிறிஸ் எலியாஸ் தலைமையிலான கேட்ஸ் நிதியத்தின் உயர் மட்டக் குழுவுக்கும் இடையேயான சந்திப்பு நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தி போன்ற துறைகளை உள்ளடக்கிய ஒரு விரிவான சமூக-பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு முழு ஆதரவளிப்பதாக கேட்ஸ் நிதியத்தின் பிரதிநிதிகள் உறுதியளித்தனர்.

டிஜிட்டல் பொருளாதாரத்திற்கான இலங்கையின் மூலோபாயத் திட்டத்தை ஆதரிப்பதாகக் கூறிய கேட்ஸ் நிதியத்தின் பிரதிநிதிகள், இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும் வளர்க்கவும் விவசாயத் துறையின் டிஜிட்டல் மாற்றத்துக்கு அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.









# யாழ்.மாவட்டத்தில் 8 பிரதேச செயலகங்களுக்கு புதிய செயலாளர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 8 பிரதேச செயலகங்களிற்கு புதிய பிரதேச செயலாளர்கள் நியமிக்கப்படுவதற்கான சிபார்சை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அனுப்பி வைத்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 8 பிரதேச செயலார்கள் புதிதாக நியமனம் செய்யப்படுகின்றனர்.

இதற்கமைய கோப்பாய் பிரதேச செயலாளராக தற்போதைய கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் ச.மஞ்சுளாதேவி நியமிக்கப்பட்டவுள்ளார்.

உடுவில் பிரதேச செயலாளராக பிறேமினி பொன்னம்பலமும், பருத்தித்துறை பிரதேச செயலாளராக ந.திருலிங்கநாதனும், சாவகச்சேரி பிரதேச செயலாளராக பி.சத்தியசோதியும், நெடுந்தீவு பிரதேச செயலாளராக பிரபாகரனும் நியமிக்கப்படுகின்றனர்.

இதேபோன்று சண்டிலிப்பாய் பிரதேச செயலாளராக கு.பிரபாகரமூர்த்தியும், மருதங்கேணி பிரதேச செயலாளராக உஷா சுபலிங்கம், வேலணை பிரதேச செயலாளராக ரி.அகிலனும் நியமிக்கப்படுகின்றனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) பதவியில் தற்போதைய உடுவில் பிரதேச செயலாளர் பா.ஜெயகரன் நியமிக்கப்படுகின்ன்அமையோடு சமுர்த்தி பணிப்பாளராக ஸ்ரீவர்மன் நியமிக்கப்படுகின்றார்.

இந்த நியமனங்களிற்கான சிபார்சை உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபை அமைச்சு, பணிப்பாளர் இலங்கை நிர்வாகசேவைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் பிரதிகள் மாவட்ட அரச அதிபர் மற்றும் மாகாண பிரதம செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# குச்சவெளியில் இடம்பெறும் காணி அபகரிப்புகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி நிலாவெளியில்!

**(எஸ்.கீதபொன்கலன்)**

குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெற்று வரும் காணி அபகரிப்புகள் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்வு நேற்று திருகோணமலை பெண்கள் வலையமைப்பினால் நிலாவெளியில் நடாத்தப்பட்டது.

இந்நிகழ்வில் சட்டத்தரணிகளான திருமதி பிரசாந்தினி மற்றும் ஸ்ரீகணேஷராஜன் ஆகியோர் கலந்து கொண்டு விளக்கவுரைகளை வழங்கினர்.

பௌத்த பிக்குவினால் அபகரிப்பிற்குள்ளாகியுள்ள திரியாய் ஆத்திக்காடு காணி பற்றிய கருத்துகளும் இக்கலந்துரையாடலின் போது குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர் கே.டணுஜனால் முன்வைக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பங்குபற்றிய குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர் மு.ரவீந்திரன் கும்புறுபிட்டி கிராமத்தில் நிலவும் ஆவணங்கள் அற்ற காணிகள் தொடர்பான விடயங்கள் பற்றியும் கருத்துத் தெரிவித்தார்.

இப் பிரதேசத்தில் தொடர்ச்சியாக இடம் பெறும் காணி அபகரிப்புகளால் பாதிக்கப்பட்ட தமிழ் மற்றும் முஸ்லிம் பொதுமக்கள் இக்கலந்துரையாடலில் பங்கெடுத்தனர்.
















# யாழ் நகரில் மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் நேரில் சென்று ஆராய்ந்தார் முதல்வர் மதிவதனி

யாழ்ப்பாணம் மாநகரத்தின் மத்தியில் பொது மக்கள் அதிகம் வந்து செல்லும் பகுதிகளில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும் வகையில் விசேட திடீர் கள விஜயம் ஒன்றை யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசா அவர்கள் கடந்த செவ்வாயன்று மேற்கொண்டெ.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம், அதற்கு அருகில் உள்ள கடைகள், வீதியோர பழங்கள் விற்பனைக் கடைகள் ஊடாக போக்குவரத்து செய்ய முடியாமல் பொது மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் அவர் நேரடியாக ஆராய்ந்தார். நடைபாதையில் காட்சிப் படுத்தப்பட்டிருந்த விற்பனைப் பொருள்களை அப்புறப்படுத்துமாறு கடை நடாத்துனர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

முதல்வரின் அறிவுறுத்தலை மீறி தொடர்ந்தும் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் நடைபாதையில் விற்பனைப் பொருள்கள் காட்சிப் படுத்தப்படுமாக இருந்தால் மாநகர வருமான வரி பரிசோதகர்களினால் முன்னறிவித்தல் இன்றி பொருள்கள் மாநகர வாகனங்களைக் கொண்டு வந்து அகற்றப்படும் என்றும் வியாபாரிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

மேலும் நகர்ப்புற உணவகங்களின் சுகாதார நிலமைகள், கழிவு நீர் வெளியேற்றப்படும் முறைகள் தொடர்பில் ஆராய்ந்தமையுடன், கடைகளின் சுகாதார நடைமுறைகளை ஆவண ரீதியாக உறுதிப்படுத்துமாறு முதல்வர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். நகர்ப்புற வடிகால்கள் பல மிகவும் மோசமான நிலமையில் கிடப்பதை அவதானித்த முதல்வர் விசேட குழுவை நியமித்து நகர்ப்புற வாய்க்கால்களை சுத்தப்படுத்த நடவடிக்கைகளை துரிதப்படுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.











# கொட்டாஞ்சேனை சாயி நிலையத்தில் நேற்று சாயி குரு பூர்ணிமா நிகழ்வுகள்



கொழும்பு, கொட்டாஞ்சேனை புதுச் செட்டித் தெரு, சாயி நிலையத்தில், பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா (கொழும்பு) மத்திய நிலையம், சீரடி சாயிபாபா (இலங்கை) மத்திய நிலையம் ஏற்பாட்டில், அதன் தலைவர் எஸ்.என்.உதயநாயகம் தலைமையில் வியாழக்கிழமை, பௌர்ணமி தினத்தன்று சாயி குரு பூர்ணிமா நிகழ்வுகள், சிறப்பாக நடைபெற்றன. நிகழ்வில் பால் அபிஷேகம் நடைப்பெறுவதையும், பிரதான கும்பத்தை தலைவர் எஸ். என். உதயநாயகம் ஊர்வலமாக சுமந்து வந்து அபிஷேகம் செய்கின்றமையையும், தொடர்ந்து அலங்கார தீபம் காண்பிக்கப்படுவதையும், சாயி பஜனை நடைபெறுவதையும் படங்களில் காணலாம்.

(படப்பிடிப்பு :- சண்முகலிங்கம் சுரேந்திரன்)






# வீதியை விட்டு விலகியதால் 70 அடி பள்ளத்தில் விழுந்த வான்

**(க.கிஷாந்தன்)**

மாத்தறையிலிருந்து நுவரெலியாவுக்கு இளைஞர்கள் குழுவை ஏற்றிச் சென்ற வான் ஒன்று, வீதியை விட்டு விலகி 70 அடி பள்ளத்தில் விழுந்ததில், வானில் பயணித்த எட்டு பேர் பலத்த காயங்களுக்குள்ளாகி நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று நானு ஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று (10) அதிகாலை 5 மணியளவில் ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதியில் நானுஓயா டெஸ்போட் தோட்ட பகுதியில் நிகழ்ந்துள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்களை டெஸ்போட் பகுதியில் உள்ள மக்கள் மீட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

விபத்து தொடர்பில் விசாரணை நடத்தி வரும் நானுஓயா பொலிஸார், வானின் சாரதி தூங்கியதால் விபத்து ஏற்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் வானும் பலத்த சேதம் அடைந்துள்ளது.






# நறுவிலிக்குளம் விபத்தில் சிறுவன் மரணம் தந்தை, தாய், சகோதரி மூவரும் படுகாயம்

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் – நானாட்டான் பிரதான வீதி, நறுவிலிக்குளம் பகுதியில் நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன்,மேலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் – நானாட்டான் பிரதான வீதி, நறுவிலிக்குளம் பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிளில் தந்தை,தாய்,மகன் மற்றும் மகள் ஆகிய நான்கு பேரும் நேற்று மாலை நானாட்டான் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது நானாட்டான் பிரதான வீதியூடாக மன்னார் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பட்டா ரக வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

இதன் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தை, தாய்,மகன் மற்றும் மகள் ஆகிய நான்கு பேரும் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும் பலத்த காயங்களுக்கு உள்ளான 4 வயதுடைய சிறுவன் சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்தான்.

மேலும் பலத்த காயமடைந்த தந்தை, தாய் மற்றும் 12 வயதுடைய சிறுமி ஆகிய மூவரும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பட்டா வாகனத்தின் சாரதியைக் கைது செய்த முருங்கன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.






# அமெரிக்க தீர்வை வரிக் கொள்கை குறித்து ஜனாதிபதி தலைமையில் கலந்துரையாடல்

அமெரிக்க அரசாங்கத்தால் விதிக்கப்பட்டிருக்கும் புதிய தீர்வை வரிக் கொள்கை தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும் இலங்கை தூதுக்குழுவிற்கும் இடையே நேற்று காலை ஜனாதிபதி அலுவலகத்தில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜெயந்த பெர்னாண்டோ, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, வர்த்தகம், வணிகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கே.ஏ. விமலேந்திராஜா, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ ஆகியோர் கலந்து கொண்டனர்.












# புதுக்குடியிருப்பில் புலிகள் பயன்படுத்திய பதுங்குகுழியைத் தோண்டும் பணி நிறுத்தம்

(பா.சதீசன்)

தமிழீழ விடுதலைப்புலிகள் பயன்படுத்திய பாரியளவிலான நிலக்கீழ் பதுங்குகுழியைத் தோண்டும் நடவடிக்கை நேற்றைய தினம் காலை 10.30 மணியளவில் முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு நேற்று மாலையுடன் இடைநிறுத்தப்பட்டது.

8 ஆம் வட்டாரம், மந்துவில் கிராமத்தில் உள்ள தனியார் காணி ஒன்றில் போரின் முன்னர் விடுதலைப் புலிகளின் தலைவர் மற்றும் தளபதிகள் பயன்படுத்தினர் என்று கருதப்படும் நிலக்கீழ் பதுங்குகுழியைத் தோண்டும் நடவடிக்கை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஆர்.ஹெரத் தலைமையில் நேற்றையதினம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

2009ஆம் ஆண்டு போருக்கு பின்னர், குறித்த காணியில், கண்ணிவெடி அகற்றும் இராணுவத்தினர் நிலை கொண்டிருந்தனர். போரின் குண்டுத் தாக்குதல்களால், பதுங்குகுழியின் வாயில்கள் மூடப்பட்ட நிலையில், அதனை மக்கள் பொருள்படுத்தவில்லை. இந்த நிலக்கீழ் பதுங்கு குழி சுமார் 20 அடி ஆழத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலக்கீழ் பதுங்குகுழியில், விடுதலைப் புலிகளின் தங்கமோ அல்லது ஆயுதங்களோ புதைக்கப்பட்டிருக்கலாம் எனச் சிலர் வீட்டின் உரிமையாளர்களுக்குத் தெரியாமல் நிலத்தைத் தோண்டும் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். அதன் பின்னர் புதுக்குடியிருப்பு பொலிஸார் அந்தப் பகுதியைப் பார்வையிட்டு, நீதிமன்ற நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு நேற்று முன்தினம் இந்த நிலக்கீழ் பதுங்குகுழியை கிராம சேவையாளர், விஷேட அதிரடி படையினர், குண்டு செயலிழக்கும் பிரிவினர், பொலிஸார் உள்ளிட்ட அதிகாரிகள் முன்னிலையில் கனரக

தொடர்ச்சி▼













# புதுக்குடியிருப்பில் புலிகள் பயன்படுத்திய பதுங்குகுழியைத் தோண்டும் பணி நிறுத்தம்

தொடர்ச்சி▲

இயந்திரம் கொண்டு துப்பரவு பணிகள் முன்னெடுக்கப்பட்டன. நிலக்கீழ் பதுங்கு குழியில் நீர் நிரம்பிக் காணப்படுவதால் அதனையும் வெளியேற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை சம்பவ இடத்துக்குச் சென்ற முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் தர்மலிங்கம் பிரதீபன் அந்தப் பகுதிகளைப் பார்வையிட்டமையுடன், தொடர்ந்தும் நேற்றுக் காலை அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க பொலிஸாருக்கு பணித்திருந்தார். அதனை தொடர்ந்து நேற்று காலை 10.30 மணியளவில் அகழ்வு பணி ஆரம்பமாகி எதுவும் அற்ற நிலையில் வெறும் தகரங்களே இருந்தமையால் இன்றுமாலை4.30மணியளவில்அகழ்வு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.











# இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் இலங்கை கடற்படையால் விரட்டியடிப்பு

இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்களை இலங்கை கடற்படையினர் தலைமன்னார் அருகே வலைகளை வெட்டி விரட்டியடித்துள்ளனர் என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து 450 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 2,000 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் புதன்கிழமை கடலுக்குச் சென்றனர்.

இந்நிலையில், நள்ளிரவில் மீனவர்கள் தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, ரோந்து சென்ற இலங்கை கடற்படையினர், எல்லை தாண்டி மீன் பிடித்தனர் என கூறி 10 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் இருந்து வலைகளை கடலுக்குள் வெட்டி எறிந்தனர்.

இலங்கை கடற்படையினர் விரட்டியடித்ததால் அச்சமடைந்த 50 இற்கும் மேற்பட்ட இராமேஸ்வரம் விசைப்படகுகளுடன் மீனவர்கள் மீன்பாடு இல்லாமலும், சிலர் மீன்பிடிக்காமலும் நஷ்டத்துடன் நேற்று கரை திரும்பியுள்ளனர்.

# த.வெ.க. கொடி வண்ணம் பூசிய படகுகளுக்கு மானியம் நிறுத்தம்

## நெல்லை மீனவர்கள் அதிர்ச்சி




திருநெல்வேலி மாவட்டம் கூடங்குளம் அருகே கூட்டப்புளி மீனவர் கிராமத்தில் தமிழக வெற்றிக் கழகம் என்று எழுதி, அக்கட்சி கொடியின் வண்ணம் பூசப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு அரசு மானிய மண்ணெண்ணெய் வழங்க மறுக்கப்பட்டமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கூட்டப்புளி மீனவர் கிராமத்தை சேர்ந்த சூசை, ரூபன், அஜித் உட்பட 10 மீனவர்கள் தமிழக வெற்றிக் கழகத்தில் உறுப்பினர்களாக உள்ளனர்.

இவர்கள் தங்களது நாட்டுப் படகுகளில் தமிழக வெற்றிக் கழகம் என்று எழுதி, அக்கட்சி கொடியின் வண்ணத்தை பூசியிருக்கிறார்கள். அவ்வாறு கட்சி கொடி வண்ணத்தை பூசியிருந்ததால் இந்த மாதத்துக்கு அரசு மானியமாக வழங்க வேண்டிய 250 லிட்டர் மண்ணெண்ணெய் இந்த மீனவர்களுக்கு வழங்கப்படவில்லை.

இது குறித்து அதிகாரிகளிடம் மீனவர்கள் கேட்டபோது, குறிப்பிட்ட கட்சி கொடியின் வண்ணத்தில் படகுகள் இருப்பதால் மானியத்தில் மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை என்றும், வண்ணத்தை மாற்றினால் வழங்குவதாகவும் தெரிவித்துள்ளனர். இது குறித்து கட்சி நிர்வாகிகளிடம் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

பிற கட்சி கொடிகளின் வண்ணத்தில் பல படகுகள் உள்ள நிலையில், தமிழக வெற்றிக் கழகம் கட்சி கொடி வண்ணத்தை பூசியுள்ளபடகுகளுக்குமானியத்தில்மண்ணெண்ணெய் வழங்கப்படாததற்கு அக்கட்சி நிர்வாகிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர். இதற்கு கண்டனம் தெரிவித்து ராதாபுரத்திலுள்ள மீன்வளத்துறை அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டம் நடத்தப்படும் என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தமிழக வெற்றிக் கழக திருநெல்வேலி தெற்கு மாவட்ட செயலர் ராஜகோபால் கூறும்போது,

“கூட்டப்புளி மீனவர் கிராமத்திலுள்ள நாட்டுப் படகுகளில் தமிழக வெற்றிக் கழகப் பெயரும், வண்ணமும் பூசியதால் மானியத்தை ரத்து செய்வோம் என்று மீன்வளத் துறை அதிகாரிகள் மீனவர்களை அச்சுறுத்தியுள்ளனர். ஆட்சியாளர்களுக்கு இசைவு போகும் அரசு அதிகாரிகளை வன்மையாக கண்டிக்கிறோம். எங்களது கண்டனங்களை தெரிவிக்கும் வகையில் மீன்வளத் துறை அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டம் நடத்தவுள்ளோம்.” என்று தெரிவித்தார்.

இதனிடையே, “மீனவ நண்பர்கள் தங்களின் படகுகளில் தமிழக வெற்றிக் கழகம் என்று குறிப்பிட்டிருந்தால் அவர்களுக்கு மானியம் வழங்க மறுப்பதா?” என வினவி, தி.மு.க. அரசுக்கு த.வெ.க. தலைவர் விஜய் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேலும், இனி வரும் காலங்களில் அரசு இது போன்ற செயல்களை முற்றிலுமாகக் கைவிட வேண்டும். இல்லையெனில், த.வெ.க. போராட்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று அவர் எச்சரித்துள்ளார்.



# சூதாட்ட செயலி விளம்பரங்களில் நடித்த 29 நடிகர்கள் மீது அமலாக்க துறை வழக்கு

சட்டவிரோத சூதாட்ட செயலி விளம்பரங்களில் நடித்த நடிகர்கள் பிரகாஷ்ராஜ், விஜய் தேவரகொண்டா, மஞ்சு லட்சுமி, பிரணீதா உட்பட 29 நடிகர்கள் மீது அமலாக்கத் துறை வழக்குப் பதிவு செய்துள்ளது.

சூதாட்ட செயலிகளுக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது. அதேநேரத்தில், சில செயலிகள் திறமையை அடிப்படையாகக் கொண்ட விளையாட்டுக்கள் என்ற பெயரில் சூதாட்டங்களில் ஈடுபடுவது கண்டறியப்பட்டுள்ளது.

அவ்வாறு கண்டறியப்பட்ட ஜங்லீ ரம்மி, ஜீட்வின், பாரிமேட்ச், லோட்டஸ் 365 போன்ற செயலிகளுக்கு ஆதரவாக விளம்பரங்களில் நடித்ததாக நடிகர்கள் பிரகாஷ்ராஜ், விஜய தேவரகொண்டா, ராணா டகுபதி, மஞ்சு லட்சுமி, பிரணீதா, நிதி அகர்வால், தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடக பிரமுகர்கள் அனன்யா நாகெல்லா, ஸ்ரீமுகி, வர்ஷினி சவுந்தரராஜன், வசந்தி கிருஷ்ணன் உள்ளிட்ட 29 பேர் மீது பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் அமலாக்கத் துறை வழக்குகளை பதிவு செய்துள்ளது.

இவர்களுக்கு எதிராக விசாகப்பட்டினம், சூர்யாபேட்டை, சைபராபாத், மியாப்பூர், பஞ்சகுட்டா ஆகிய 5 இடங்களில் தனித்தனியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதை அடுத்து அமலாக்கத்துறை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

பொழுதுபோக்கு, சமூக சேவை என்ற பெயரில் இந்த செயலிகள் பொதுமக்களை கவர்வதாகவும், பின்னர் சூதாட்டத்தில் தள்ளுவதாகவும் பொலிஸ் நிலையங்களில் புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

# அமெரிக்க விசா கட்டணம் இரண்டரை மடங்காக உயர்வு




அமெரிக்கா தனது விசா நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளைத் தீவிரப்படுத்தியுள்ள நிலையில், விசா கட்டணத்தையும் இரண்டரை மடங்கு உயர்த்தியுள்ளதாக அமெரிக்கச் செய்திகள் தெரிவிக்கின்றன.

டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதிலிருந்து, விசா வழங்குவதில் பல நிபந்தனைகளையும், கட்டுப்பாடுகளையும் கொண்டு வந்துள்ளார்.

இந்தநிலையில், “பிக் பியூட்டிபுல் பில்“ எனப்படும் அரச செலவீனம் தொடர்பான சட்டமூலம் சமீபத்தில் நிறைவேறியது.

இதற்கு ட்ரம்பும் ஒப்புதல் அளித்துள்ளார். இந்த சட்டத்தின்படி, விசா கட்டணங்கள் உயர்த்தப்படுகின்றன.

இதன்படி, குடியேற்றம் அல்லாத, மாணவர், தொழில், சுற்றுலா போன்ற விசாக்களுக்கான கட்டணங்களுடன், “இன்டகிரிட்டி” எனப்படும் நேர்மைக் கட்டணமாக, 250 டொலர் கூடுதலாக வசூலிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தவிர, மேலும் சில கூடுதல் கட்டணங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. இவை, 2026 இல் இருந்து நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை, அனைத்து நாடுகளுக்கும் பொருந்தும் எனவும், இந்தக் கூடுதல் கட்டணம், நிபந்தனைகளின் அடிப்படையில் நாடு திரும்பும்போது திருப்பித் தரப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இந்த கட்டணங்கள், விலைவாசியுடன் தொடர்புடையவை எனவும் அதனால் ஆண்டுக்கு ஆண்டு கட்டணத் தொகையில் மாற்றம் ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# டெக்சாஸ் வெள்ளத்தில் சிக்கி இதுவரை 120 பேர் உயிரிழப்பு

## 170 பேர் மாயம்

அமெரிக்காவின் டெக்சாஸில் கடந்த ஜுலை 4 ஆம் திகதி ஏற்பட்ட பெருவெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 120 ஆக உயர்ந்துள்ளது. காணாமல் போன 170 பேரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் கடந்த வாரத்தில் கனமழை பெய்தது. இதில் கடந்த ஜுலை 4 ஆம் திகதி சில மணி நேரத்தில் 280 மில்லி மீற்றர் மழை பெய்தது. இதன் காரணமாக குவாடலூப் நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, சுமார் 2 மணி நேரத்தில் நதியின் நீர்மட்டம் 30 அடி வரை உயர்ந்தது. இதனால் ஹில் கன்ட்ரி பகுதியில் குவாடலூப் நதிக் கரைகளில் இருந்த வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

கெர் கவுன்டியில் ஆற்றங்கரையோரத்தில் இருந்த கிறிஸ்தவ மாணவிகள் முகாம் இந்த வெள்ளத்தில் கடுமையாக மூழ்கியது. இதில் பலர் உயிரிழந்தனர். மீட்புப் பணியின்போது கெர் கவுன்டியில் உள்ள இந்த முகாமில் இருந்து 28 மாணவிகளின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும், கெர் கவுன்டியில் இதுவரை 95 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதில் சுமார் 40 குழந்தைகள் அடங்குவர்.

இந்த வெள்ளத்தால் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள டிராவிஸ், பர்னெட், கெண்டல், டாம் கிரீன் மற்றும் வில்லியம்சன் பகுடிகளில் பலர் உயிரிழந்துள்ளனர். செவ்வாய்க்கிழமை மாலை நிலவரப்படி, டெக்ஸாஸ் மாகாணத்தில் உயிழந்தோர் எண்ணிக்கை 120 ஆக உயர்ந்துள்ளது. 170 இற்கும் மேற்பட்டோரை காணவில்லை என்று டெக்சாஸ் ஆளுநர் கிரெக் அபோட் தெரிவித்தார். இதனால் இறப்பு எண்ணிக்கை இன்னும் கணிசமாக உயரக்கூடும் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெக்சாஸ் மாகாணத்தில் காணாமல் போனோரை கண்டு பிடிக்க தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்தப் பணியில் விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள், மோப்ப நாய்கள் மற்றும் குதிரைகளை மீட்புப் படைகள் பயன்படுத்தி வருகின்றன.









# இன்றைய ராசி பலன்கள் -11.07.2025




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நம்பிக்கை நிறைந்து காணப்படும் நாள். கடின உழைப்புக்கு வெற்றி கிடைக்கும் நாள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் திருப்தியான சூழல் காணப்படும். கடினமான உழைப்பின் மூலம் நற்பெயரும் அதன் மூலம் நன்மதிப்பும் பெறுவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலையில் அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். அதிர்ஷ்டம் காரணமாக நிதிநிலையில் முன்னேற்றம் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று முழுவதும் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்காது. நீங்கள் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் கடைபிடிக்க வேண்டும். எது நடக்கிறதோ அதை அப்படியே எற்றுக் கொள்ள வேண்டும். இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய இறை வழிபாடு மற்றும் பிரார்த்தனையை மேற்கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காரணமாக அதிருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளுடன் பிரச்சினைகளை சந்திப்பீர்கள். பணிகள் அதிகம் காணப்படுவதால் ஒய்வு கிடைப்பது அரிது.

உங்கள் மனதில் குழப்பமான உணர்வுகள் காணப்படும். இதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும். நிதியைப் பொறுத்த முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்க வேண்டும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.




இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி கிடைக்கும் நாள். உங்களின் நேர்மையான முயற்சி மூலம் உங்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை நீங்கள் உணரும் நாள். இன்று முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் செயல் திறனில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் தொடர்ந்து கடின முயற்சி செய்து உங்கள் திறமைகளை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு குறைந்து காணப்படும். இதனால் உறவில் திருப்தியான நிலை இருக்காது.

இன்று பணப் புழக்கம் அதிகமாக காணப்படும். இந்தப் பணத்தை ஆடம்பரப் பொருள்கள் வாங்கப் பயன்படுத்தலாம்.

உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும். எனவே உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று மந்தமான நிலையே காணப்படும். உங்கள் வளர்ச்சியை பாதிக்கும் தேவையற்ற உணர்வுகளுக்கு இடம் அளிக்காதீர்கள். அமைதியாக இருந்து எதையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும்.

உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கை காரணமாக கடினமான பணிகயும் விரைவாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாதீர்கள். உங்கள் பிரச்சனைகளை நட்புடன் பேசி தீர்த்துக் கொள்ளுங்கள்.

பொறுப்புகளும் பணத் தேவைகளும் அதிகமாகக் காணப்படும். அது உங்களை வருத்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உற்சாகக் குறைவு காரணமாக தன்னம்பிக்கையும் ஆற்றலும் பாதிக்கப்படும்.




இன்று உங்களுக்கு ஆக்கப் பூர்வமான நாள், இன்று ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படுவீர்கள். இன்று எடுக்கும் புதிய முயற்சிகள் வெற்றியை அளிக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பொறுமையுடன் பணிகளைக் கையாள வேண்டும். உங்கள் சக பணியாளர்களிடம் பேசும் போது பொறுமை தேவை.

உங்கள் துணையிடம் நட்புணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவின் சிறப்பை உங்கள் துணை உணர்ந்து கொள்ள இயலும்.

நிதிநிலை சிறப்பாக காணப்படும் நாள். உங்கள் தேவைகள் பூர்த்தியடையும். நீங்கள் அதிக பணம் சேமிப்பீர்கள்.

இன்று கால் வலி ஏற்படலாம். யோகா மேற்கொள்வது ஆறுதலைத் தரும்.




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். முக்கியமான செயல்களை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடவும். எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கை இழக்காதீர்கள்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். இன்று பணியில் மூழ்கி இருப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக பணியாற்றலாம்.

உங்கள் துணையுடன் பேசும் பொது அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருங்கள். இதன் மூலம் கண்டிப்பாக இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

பயணத்தின் போது பணத்தை கவனமாகக் கையாளவும். கையில் அதிக பணத்தை எடுத்துச் செல்ல வேண்டாம்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படுகின்றது.




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். சவால்கள் நிறைந்து காணப்படும் நாள் என்பதால் உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். மனக் குழப்பங்களை நீக்கி தெளிவாக இருக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

உங்களின் நேர்மறையான உணர்வுகள் காரணமாக உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இதனால் உறவில் அமைதியும் திருப்தியும் நிலவும்.

அதிக பணம் சம்பாதிக்கும் வாய்ப்பும் கணிசமான தொகை சேர்க்கும் வாய்ப்பும் இன்று குறைவு. இன்று அதிர்ஷ்டமும் உங்களுக்கு சாதகமாக இல்லை.

வயிற்று வலியால் நீங்கள் பாதிக்கபடலாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தியானம் மற்றும் பிரார்த்தனை மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.




இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி கிடைக்கும் நாள். உங்களின் நேர்மையான முயற்சி மூலம் உங்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை நீங்கள் உணரும் நாள். இன்று முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் செயல் திறனில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் தொடர்ந்து கடின முயற்சி செய்து உங்கள் திறமைகளை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு குறைந்து காணப்படும். இதனால் உறவில் திருப்தியான நிலை இருக்காது.

இன்று பணபுழக்கம் அதிகமாக காணப்படும். இந்தப் பணத்தை ஆடம்பரப் பொருள்கள் வாங்கப் பயன்படுத்தலாம்.

உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும். எனவே உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -11.07.2025




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்காது. நீங்கள் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் கடைபிடிக்க வேண்டும். எது நடக்கிறதோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய இறை வழிபாடு மற்றும் பிரார்த்தனையை மேற் கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காரணமாக அதிருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளுடன் பிரச்சினைகளை சந்திப்பீர் கள்.பணிகள் அதிகம் காணப்படுவதால் ஓய்வு கிடைப் பது அரிது.

உங்கள் மனதில் குழப்பமான உணர்வுகள் காணப்படும். இதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு பராம ரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும். நிதியைப் பொறுத்த முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்க வேண்டும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை. உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.




உங்களின் சமயோசித புத்தி மற்றும் புத்திசாலித்தனம் காரணமாக இன்று பயனுள்ள பலன்கள் சாத்தியம். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

இன்று நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் செயல் திறன் அசர வைக்கும். உங்கள் முயற்சிக்கு மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். குடும்ப பிரச்சினைகளை கலந்தாலோசித்து சுமூகமான தீர்வு காணுவீர்கள்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வீர்கள். பூர்வீக சொத்து மூலம் பணவரவு வர வாய்ப்புள்ளது.

உங்கள் நேர்மறை எண்ணம் மற்றும் மனஉறுதி காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் சாதகமான நாள்.குறைந்த முயற்சியில் அதிக வெற்றி பெறுவீர்கள். இன்று நம்பிக்கை உணர்வுடன் இருப்பீர்கள். இதனால் நன்மை ஏற்படும்.

இன்று முக்கிய சந்திப்புகளில் கலந்து கொள்வதில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக எடுத்துச் சொல்வீர்கள். இது உங்கள் சகபணியாளர்களுக்கு ஆச்சரியம் அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். இது அவரை மகிழ்விக்கும். எனவே பொதுவாக இருவரிடமும் மகிழ்ச்சி காணப்படும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் ஸ்திரமான ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். தேக ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும்.




இன்று இனிமையான நாள். உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் செயல்களை எளிதாக முடிப்பீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் அதிர்ஷ்டமான நாள்.

உங்கள் செயல்திறனுக்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்கள் பணிகளை சிறந்த தரத்துடன் முடித்து தருவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு உயரும். நீங்கள் இன்று புதிய முதலீடுகளை செய்யலாம். அது லாபகரமாக இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் மன உறுதி காரணமாக இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

# பால்தேநீரின் விலை அதிகரிக்கும் வாய்ப்பு



பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து பால்தேநீரின் விலையும் 10 ரூபாவால் அதிகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை உணவக மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் இதனைத் தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால் மா பொதியொன்றின் விலை 100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.